முதல்வர் விஜய்யின் 'ரோடு ஷோ!'

தொழில்கள் முடக்கம்! போலீசார் அவதி!

பொதுமக்கள் குமுறல்!

சென்னை, அக்.20-

முதல்வர் விஜய்யின் 'ரோடு ஷோ' காரணமாக போக்குவரத்து, தொழில்கள் முடங்கி, அரசுக்கு தேவையற்ற செலவு ஏற்படுவதாக சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முதல்வராக பொறுப்பேற்றது முதல், அவ்வப்போது மாவட்ட வாரியாக, விஜய் சுற்றுப்பயணம் செய்து, அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

கர்நாடகா, ஆந்திரா என, அண்டை மாநிலங்களுக்கும் சென்று வருகிறார். பெரும்பாலும் தனி விமானத்தில் சென்றாலும், விமான நிலையத்தில் இருந்து விழா நடக்கும் இடத்திற்கு சாலை மார்க்கமாக செல்கிறார்.

தனது பிரச்சார வாகனத்தின் மேல் நின்றபடி, 'ரோடு ஷோ' வாயிலாக மக்களை சந்தித்தபடியே கையசைத்து செல்கிறார். அதைக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், ஆதரவாளர்கள் விரும்புகின்றனர்.

போக்குவரத்து நிறுத்தம்!

ஆனால், இந்த நிகழ்ச்சிக்கு ஒரு நாளுக்கு முன்பாக, அந்த பகுதியை தங்களது கட்டுப்பாட்டில், போலீசார் கொண்டு வருகின்றனர். முதல்வர் செல்லும் போது இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக, சாலைகளில் போக்குவரத்தும் நிறுத்தப்படுகிறது.

முன்னாள் முதல்வர்கள் கலைஞர், மு.க.ஸ்டாலின், ஜெயலலிதா, பழனிசாமி, உள்ளிட்டோர் சாலைகளில் நிகழ்ச்சிகளுக்கு செல்லும் போது, சிறிது நேரமே போக்குவரத்து நிறுத்தப்படும்.

ஆனால், முதல்வர் விஜய் செல்லும் போது, குறைந்தபட்சம் மூன்று முதல் ஆறு மணி நேரம் வரை போக்குவரத்து நிறுத்தப்படுகிறது. அந்த பகுதிகளில் கடைகளையும் அடைக்கும்படி போலீசார் அறிவுறுத்துகின்றனர்.

இதனால், அன்றைய தினம் போக்குவரத்து மட்டுமின்றி, தொழில்களும் முடங்குகின்றன. சிறுதொழில் நிறுவனங்கள், கடைகளில் வேலை பார்ப்பவர்களுக்கு அன்றைய நாளுக்கான ஊதியம் பாதிக்கப்படுகிறது.

தடுப்பு வேலிகள் ரூ.5 கோடி செலவு!

முதல்வர் பாதுகாப்பிற்காக விமான நிலையம் துவங்கி, அவர் செல்லும் வழிகளில் எல்லாம், இரண்டு புறங்களிலும் இரண்டு தடுப்புகள் வைக்கப்படுகின்றன.

இதற்கு குறைந்தபட்சம் ஐந்து கோடி ரூபாய் வரை செலவிடப்படுகிறது. கடும் நிதி நெருக்கடியில் அரசு சிக்கியுள்ள நிலையில், தேவையற்ற செலவும் ஏற்படுகிறது.

அவதிக்குள்ளாகும் போலீசார்!

முதல்வரின் சாலை வலம் நிகழ்ச்சியால், பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. பாதுகாப்பு பணியில் ஈடுபடும் ஆண், பெண் போலீசாரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

அலட்சியம் வெட்ட வெளிச்சமாகி உள்ளது! மழைநீர் தேங்கியது பற்றி

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் விளக்கம் தர வேண்டும்!

முக்கிய ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, அக்.20-

சென்னை மாநகராட்சியைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறையின் அலட்சியமும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது. தன் சொந்த அலுவலக வளாகத்திலேயே மழைநீர் தேங்கியுள்ளதற்கு ஆணையர் யாரிடம் விளக்கம் கேட்கப் போகிறார்? ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய ஆவணங்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்ய வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில், இதைவிடப் பெருமழை பெய்த காலங்களில்கூட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் இவ்வாறு மழைநீர் தேங்கியதில்லை.

சென்னை மாநகராட்சி நிர்வாகம் உறக்கத்தில் இருப்பதாக மக்கள் கேள்வி எழுப்பும் நிலையில், இந்து சமய அறநிலையத்துறையும் அதே அலட்சியப் போக்கில் செயல்படுவது வெட்டவெளிச்சமாக தெரிகிறது.

அனைத்து விவகாரங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி விளக்கம் கேட்கும் ஆணையர், தனது அலுவலக வளாகத்திலேயே மழைநீர் தேங்கியிருப்பதற்கு யாரிடம் விளக்கம் கேட்கப் போகிறார்?

கோயில்களின் நிர்வாகம், சொத்துப் பாதுகாப்பு, பழமையான ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய ஆவணங்களைப் பாதுகாப்பது எனப் பல முக்கியப் பொறுப்புகளைக் கொண்ட துறையின் அலுவலகத்திலேயே மழைநீர் தேங்குவது கவலைக்குரியது. நீர் உட்புகும் அபாயம் இருந்தால், நூலகங்களிலும் ஓலைச்சுவடிப் பாதுகாப்புப் பெட்டகங்களிலும் உள்ள அரிய ஆவணங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிப்புகள் வெளியிடப்படும் நிலையில், நடைமுறையில் இத்தகைய நிலை ஏன் ஏற்பட்டது? வடிகால் வசதிகள் முறையாகப் பராமரிக்கப்பட்டனவா? மழைநீர் தேங்குவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா?

அறிவிப்புகளும் சுற்றறிக்கைகளும் மட்டும் நிர்வாகமல்ல; களத்தில் தெரியும் செயல்பாடுகளே நிர்வாகத்தின் அளவுகோல்!

மழைநீர் தேங்கியதற்கான காரணம் என்ன, பொறுப்பான அதிகாரிகள் யார், அரிய ஆவணங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதா என்பவை குறித்து வெளிப்படையான விளக்கம் அளிக்கப்பட வேண்டும். இனியும் இது போன்ற அலட்சியம் நிகழாத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

சபா.இராஜேந்திரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் பங்கேற்பு!

அரியலூர், அக், 20-

அரியலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மகாலில் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கழக மாநில இளைஞரணி செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படியும், மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்றக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் ஆகியோர் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகளிடம் கழக படிவம் வழங்கி தற்பொழுது உள்ள ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் கொடுக்கப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்து மாவட்ட கழகத்திடம் வழங்கிடவேண்டும், மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் புதிய கிளைகள் அமைப்பதும், அந்த கிளையில் எத்தனை நபர்கள் இருக்கவேண்டும் என கூறினர். கொடுக்கப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்து உடனடியாக அந்த அந்த பார்வையாளர்களிடம் வழங்கிட வேண்டும் பல ஆலோசனை கருத்துகளை எடுத்து கூறி உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க.கண்ணன், து.அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள்,

வி.எழில்மாறன், இரா. அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன்,

நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார்,

வீர.சிவா, நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி,

பேரூர் கழக செயலாளர்கள். ப.கோபாலகிருஷ்ணன் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா, பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதிகருணாநிதி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.இராமராஜன், க.தர்மதுரை, கருப்புசாமி, வின்சண்ட்ராஜா, இரா.குலோத்துங்கன், முருகாணந்தம், ஆதி.இளங்கோவன், பானுமதி இராஜேந்திரன், மீனா சாமிநாதன், அருண்ராஜா,

ஜெயகுமார், இரவிகுமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் செல்வ. பிரபாகரன் ,

சிவ.ரமேஷ், சீ.சுரேஷ், இராணி, சித்ரா, விஜயலட்சுமி, முத்தமிழ்,தமிழழகி, ஆண்டிமடம் கிழக்கு ஒன்றிய மேற்பார்வையாளர் கு.பிரபாகரன்,

மற்றும் மாவட்ட,, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள்,மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

சென்னை,அக்.20-

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் 22.10.2026 வியாழன்கிழமை காலை 10.15 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது. முன்னாள் அமைச்சர், கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ, மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிரவன் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.



ஆகவே இக்கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. பசும்பொன் தேவர் திருமகனார் ஜெயந்தி விழா மாண்புமிகு கழக தலைவர், அவர்களின் வருகை.
2. எதிர்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்த நாள் விழா.
3. கழக ஆக்கப்பணிகள்.


இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.





வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (18.10.2026) மாவட்ட அவைத்தலைவர் சி.நரசிம்மன் தலைமையில் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தலைமை கழக பிரதிநிதிகள் இ.கருணாநிதி, ப.தாயகம் கவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். டி.எம்.கதிர் ஆனந்த் சிறப்புரையாற்றிட, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழகங்கள் மறுசீரமைப்பு குறித்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; த.வெ.க. அரசு சென்னையில் மானிய விலையில் அரிசியும் (ரூ.30) பருப்பும் (ரூ.130) திடீர்ன்னு போடறதா சொல்றாங்களே! ஜனங்க மேலே அவ்வளவு அக்கறையா?

போண்டி : **ஆமாய்யா; ஏதோ 30 இடத்திலே போடறதா சொல்றாங்க. ஜனங்க மேலே உள்ள அக்கறை எல்லாம் கிடையாது. தி.மு.க. தலைவர் ஸ்டாலின் சார், விலைவாசி உயர்வை ஆதாரத்துடன் புட்டு புட்டு வச்சாரில்லையா? அவர் சொன்னது எங்கே மக்கள் கிட்டே போய் சேர்ந்திடும்ன்னு தான் அவசர அவசரமா இப்படி போடறாங்கன்னு நினைக்கிறேன். இது தொடர்கிறதான்னு பார்ப்போம்யா.**

சென்னையில் கன மழை! பூண்டி, புழல் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

சென்னை, அக்.20-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. அந்த வகையில் கடந்த இரு தினங்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அந்த வகையில் சென்னைக்கு குடிநீர் கொடுக்கும் 6 ஏரிகளில் பூண்டி, புழல் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

ரெட்டேரி

ரெட்டேரியின் மொத்தம் ஆழம் 21.20 அடியாகும். அதில் தற்போது 14.95 அடிக்கு தண்ணீர் இருக்கிறது. இந்த ஏரியின் மொத்த கொள்ளளவு 3.300 டிஎம்சியாகும். தற்போது 2,037 டிஎம்சி தண்ணீர் இருக்கிறது. 1485 கனஅடி நீர் வரத்து வருகிறது. 196 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. இங்கு மழையின் அளவு 119 மி.மீ. ஆகும்.

சோழவரம்

சோழவரம் ஏரியின் மொத்தம் ஆழம் 18.86 அடியாகும். அதில் தற்போது 2.91 அடிக்கு தண்ணீர் இருக்கிறது. இந்த ஏரியின் மொத்த கொள்ளளவு 1.081 டிஎம்சியாகும். தற்போது 0.130 டிஎம்சி தண்ணீர் இருக்கிறது. 102 கனஅடி நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. ஆனால் 8 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. நேற்று பெய்த மழையின் அளவு 68 மி.மீ. ஆகும்.

செம்பரம்பாக்கம்

செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்தம் ஆழம் 24 அடியாகும். அதில் தற்போது 14.21 அடிக்கு தண்ணீர் இருக்கிறது. இந்த ஏரியின் மொத்த கொள்ளளவு 3,645 டிஎம்சியாகும். தற்போது 1,390 டிஎம்சி தண்ணீர் இருக்கிறது. 655 கனஅடி நீர் வரத்து வருகிறது. 203 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

நேற்று முன்தினம் பெய்த மழையின் அளவு 54 மி.மீ. ஆகும்.

சென்னையில் மழை வெள்ளம்:

குருட்டு வாரியர்சின் குறுக்கு புத்தி!

தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

தி.மு.க. ஐ.டி. விங் விடுத்துள்ள பதிவு வருமாறு:-

சென்னையில் நேற்று கனமழை பெய்து நீர் சற்று தேங்கியவுடன், என்ன செய்வதென்றே தெரியாமல் த.வெ.க.வின் 'Virtual Abusers' படையை இறக்கி, "தி.மு.க.வின் 4000 கோடி எங்கே?" என்று சமூக வலை தளங்களில் கதறத் தொடங்கினார்கள்!


ஆனால், கழக ஆட்சியின் தொலைநோக்குப் பார்வையில் இரவு பகலாகக் கட்டப்பட்ட உயர்தர மழைநீர் வடிகால்கள் காரணமாக, சில நிமிடங்களிலேயே தண்ணீர் வடிந்து ஓடியது!

நீர் வடிந்த அடுத்த வினாடியே... "அடடா, இது எங்க அரசாங்கத்தின் சாதனை!", "களத்தில் நமது அரசு!", "த.வெ.க. பாடம் புகட்டும்!" என்று சற்றும்வெட்கமே இல்லாமல் ஸ்டிக்கர் ஒட்டத் தொடங்கிவிட்டனர்!

அரை மணி நேரத்திற்கு முன்னால் "தி.மு.க.வின் 4000 கோடி சாதனைகளில் ஒன்று" என்று ட்வீட் போட்ட அதே த.வெ.க. தற்குறி, நீர் வடிந்ததும் "களத்தில் மக்களுக்காக நமது அரசு" என்று போஸ்ட் போடுகிறான் என்றால்... இதைவிட ஒரு கேடுகெட்ட பிழைப்பு அரசியல் உலகத்திலேயே இருக்க முடியுமா?

சின்னப் பிரச்சினை என்றாலும் உடனே அடுத்தவர் மீது பழிபோடக் கத்துவதும், நல்ல விஷயம் நடந்தால் தி.மு.க. உருவாக்கிய உட்கட்டமைப்பைத் தன் கணக்கில் எழுதி 'க்ரெடிட்' திருடுவதும்தான் உங்களது 'யோக்கியமான' மாற்று அரசியலா?

இவ்வாறு கழக ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.





தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான அனைத்து துறை அலுவலர்களுக்கான கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்.ஜீ.வி.மார்கண்டேயன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கும் நிலையில் அனைத்து கண்மாயிலும் மதகுகளை ஆய்வு செய்திடவும் மணல் மூடைகள் தயார் நிலையில் இருந்திடவும் அறிவுறுத்தினார்.விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், மும்மூர்த்தி, காசிவிஸ்வநாதன் விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ் வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன் மாவட்ட பிரதிநிதி இராமலிங்கம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சென்றாய பெருமாள் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.